# பணி நியமங்கள்
# பணிக்கு வராத விடுப்புகள்

## கர்ப்பகாலம், பெற்றோராயிருத்தல், தனிப்பட்ட அவசரநிலை, குடும்ப மருத்துவ மற்றும் ஒதுக்கநிலைப் படையினர் (ரிசர்விஸ்ட் -Reservist)

ஈஎஸ்ஏ என அறியப்படும் பணி நியமங்கள் சட்டம், 2000 (The Employment Standards Act, 2000), ஒன்ராறியோவில் பணியிடங்களில் பின்பற்ற வேண்டிய குறைந்தபட்ச நியமங்களை வகுக்கும் சட்டமாகும்.

ஈஎஸ்ஏ சட்டத்தால் நீங்கள் பாதுகாக்கப்பட்டவர் என்றால் கர்ப்பகால, பெற்றோராயிருத்தல், தனிப்பட்ட அவசரநிலை, குடும்ப மருத்துவ மற்றும் ரிசர்விஸ்ட் விடுப்புகள் பெற உங்களுக்கு உரிமை இருக்கலாம்.

### கர்ப்பகால மற்றும் பெற்றோராயிருத்தலுக்கான விடுப்பு

**கர்ப்பகால விடுப்பு:** கர்ப்பகால விடுப்பு என்பது ஊதியமற்ற, வேலை உத்தரவாதமுடைய 17 வாரகால விடுப்பு ஆகும். நீங்கள் முழுநேர, பகுதிநேர, நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையைச் சேர்ந்த எந்தவகை ஊழியரானாலும், நீங்கள் கருவுற்றால் கார்ப்பகால விடுப்புப் பெற உங்களுக்கு உரிமை உண்டு. இந்த விடுப்பைப் பெற, குழந்தை பிறப்புத் தேதிக்கு 13 வாரங்கள் முன்னதாக நீங்கள் பணியில் அமர்த்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**பெற்றோராயிருத்தலுக்கான விடுப்பு:** புதிய பெற்றோர் என்ற வகையில் (உ-ம்: குழந்தையைப் பெற்றவர், தத்தெடுக்கும் பெற்றோர், ஒரு குழந்தையின் ஒரு பெற்றோருடன் உறவு கொண்டவராகவும் அக்குழந்தையைத் தமது சொந்தக் குழந்தை போலவே நடத்தத் திட்டமிட்டிருப்பவர்) குழந்தை பிறந்தவுடன் அல்லது முதன்முதலில் உங்கள் பராமரிப்புக்குள் வந்தவுடன் வேலை உத்தரவாதம் உடைய, ஊதியமற்ற விடுப்பினைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு.

நீங்கள் முழுநேர, பகுதிநேர, நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையைச் சேர்ந்த எந்த ஊழியரானாலும் பெற்றோராயிருத்தலுக்கான விடுப்புப் பெற உங்களுக்கு உரிமை உண்டு. இதற்குத் தகுதி பெற, விடுப்புத் துவங்குவதற்கு 13 வாரங்கள் முன்னதாக நீங்கள் பணியில் அமர்த்தப்பட்டிருத்தல் வேண்டும்.

கர்ப்பகால விடுப்பு எடுக்கும் ஊழியர்கள் 35 வாரங்கள் வரையில் பெற்றோராயிருத்தலுக்கான விடுப்பைப் பொதுவாகக் கர்ப்பகால விடுப்பு முடிந்த உடனேயே தொடங்கிப் பெற அருகதை உடையவர்களாவர். கர்ப்பகால விடுப்பு எடுக்காதவர்களும், ஏனைய சகல புதிய பெற்றோர்களும், குழந்தை பிறந்த அல்லது முதலில் தமது பராமரிப்புக்குள் வந்த தேதியிலிருந்து 52 வாரங்கள் பிந்தாமல் துவங்கி, 37 வாரங்கள் வரை பெற்றோராயிருத்தலுக்கான விடுப்பு எடுக்கலாம். பெற்றோர் இருவரும் ஒரே நேரத்தில் தமது விடுப்புகளை எடுக்க வேண்டியதில்லை.

**வேலைதருனருக்கு அறியத்தருதல்:** குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களைத் தவிர, பொதுவாக கர்ப்பகால அல்லது பெற்றோராயிருத்தலுக்கான விடுப்பு எடுப்பதற்கு இரண்டு வாரங்கள் முன்னதாக வேலைதருனருக்கு நீங்கள் எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும். உங்கள் விடுப்பின் கடைசித் தேதியை மாற்றுவதாக இருந்தாலும் நான்கு வாரங்களுக்கு முன்னதாக எழுத்து மூலமான அறிவித்தலை உங்கள் வேலைதருனருக்கு நீங்கள் வழங்க வேண்டும்.

**குறிப்பு:** கர்ப்பகால அல்லது பெற்றோராயிருத்தலுக்கான விடுப்பினை நீங்கள் பெற ஆரம்பித்த பிறகு அனைத்தையும் ஒரே தவணையில் எடுக்க வேண்டும். அதனைப் பகுதியாகப் பிரித்துப் பெற முடியாது.

## தனிப்பட்ட அவசரநிலை விடுப்பு

தனிப்பட்ட அவசரநிலை விடுப்பு என்பது ஒவ்வொரு நாட்காட்டி வருடத்திலும் 10 நாள் வரையிலான ஊதியமற்ற, வேலை உத்தரவாதமுடைய விடுப்பாகும். இதற்குத் தகுதி பெற, உங்கள் வேலைதருனர் குறைந்தது 50 பேரை ஒழுங்குமுறையில் பணியில் அமர்த்துதல் வேண்டும்.

பணியாளரின் உடல்நலமின்மை, காயமடைதல், மருத்துவ அவசரநிலை அல்லது பின்வரும் குடும்ப உறுப்பினர்களின் இறப்பு, உடல்நலமின்மை, காயமடைதல், மருத்துவ அவசரநிலை அல்லது அவசர விடயம் தொடர்பாக இந்த விடுப்பை எடுக்கலாம்.:

- உங்களுடைய வாழ்க்கைத் துணை
- உங்களுடைய அல்லது வாழ்க்கைத் துணையின் ஒரு பெற்றார், மாற்றான் பெற்றார், வளர்ப்புப் பெற்றார், பிள்ளை, மாற்றான் பிள்ளை, வளர்ப்புப் பிள்ளை, தாத்தா பாட்டி, மாற்றான் தாத்தா பாட்டி, பேரப்பிள்ளை அல்லது மாற்றான் பேரப்பிள்ளை
- உங்கள் பிள்ளையின் வாழ்க்கைத் துணை
- உங்கள் சகோதரன் அல்லது சகோதரி
- உங்கள் பராமரிப்பு அல்லது உதவியில் தங்கியிருக்கும் ஒரு உறவினர்

**வேலைதருனருக்கு அறியத்தருதல்**
தனிப்பட்ட அவசரநிலை விடுப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் அல்லது உங்களால் இயன்றளவு விரைவாக நீங்கள் உங்கள் வேலைதருனருக்குத் தெரிவிக்க வேண்டும்.

**குறிப்பு:** தனிப்பட்ட அவசரநிலை விடுப்பான 10 நாட்களை ஒரே தடவையில் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும், ஒரு நாளின் ஏதேனுமொரு பகுதி நேரம் விடுப்பு எடுத்திருந்தால், வேலையளித்தவர் அதைத் தனிப்பட்ட அவசரநிலை விடுப்பின் ஒரு முழுநாளாகக் கணக்கிடக்கூடும்.

## குடும்ப மருத்துவ விடுப்பு

குடும்ப மருத்துவ விடுப்பு என்பது, ஒரு 26 வார காலப்பகுதியில் 8 வாரங்கள் வரையிலான ஊதியமற்ற, வேலை உத்தரவாதமுடைய விடுப்பாகும்.

இந்த விடுப்பு குறிப்பிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு மற்றும் பணியாளரை ஒரு குடும்ப உறுப்பினர் போலக் கருதும் ஒருவர் கடுமையான மருத்துவ நிலைமைக்குட்பட்டு, ஒரு 26 வார காலப்பகுதிக்குள் உயிரிழக்கக் கூடியதான கணிசமானளவு ஆபத்துக்கு உள்ளாகி இருந்தால் அவர்களைப் பராமரிப்பதற்கு அல்லது அவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு இந்த விடுப்பைப் பெறலாம்.

மருத்துவ நிலைமை மற்றும் உயிராபத்து என்பன தகுதி பெற்ற மருத்துவர் ஒருவரால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

சமஷ்டி அரச தொழில் காப்பீடு கருணைப் பராமரிப்பு நலன்களுக்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தாலும் இல்லாவிட்டாலும், குடும்ப மருத்துவ விடுப்பு உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் தொழில் காப்பீடு கருணைப் பராமரிப்பு (EI) நலன்களுக்கு விண்ணப்பிப்பதாக இருந்தால், கனடா மனித வளங்கள் மற்றும் சமூக அபிவிருத்திப் பகுதிக்குச் சமர்ப்பித்த மருத்துவச் சான்றிதழின் பிரதி ஒன்றினையே குடும்ப மருத்துவ விடுப்புத் தேவைகளுக்கும் பயன்படுத்தலாம்.

நீங்கள் முழுநேர, பகுதிநேர, நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையைச் சேர்ந்த எந்தவகை ஊழியரானாலும் குடும்ப மருத்துவ விடுப்புப் பெற உங்களுக்கு அருகதை உண்டு.

ஒரேநபரைப் பராமரிக்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் தகுதி பெற்றால், இந்த 8 வாரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**வேலைதருனருக்கு அறியத்தருதல்:** நீங்கள் குடும்ப மருத்துவ விடுப்பு எடுக்க இருப்பதை விடுப்பு எடுப்பதற்கு முன்னர், அல்லது உங்களால் இயன்றளவு விரைவில் எழுத்து மூலம் வேலைதருனருக்குத் தெரிவிக்க வேண்டும்.

**குறிப்பு:** குடும்ப மருத்துவ விடுப்புக்கான எட்டு வாரங்களையும் ஒரே நேரத்தில் எடுக்க வேண்டும் என்பதில்லை.

## ரிசர்விஸ்ட் விடுப்புகள்

இராணுவ ரிசர்விஸ்டுகளாக இருக்கும் ஊழியர்கள் மற்றும் ஒரு பன்னாட்டு அல்லது கனடாவிற்குள்ளான நடவடிக்கைக்காக அனுப்பப்படுபவர்கள் அல்லது அவசர நிலைமைக்கு அல்லது (தேடுதல், மீட்புப்பணி போன்றன உட்பட) நிகழ்வுக்குப் பின்னரான நிலையில் உதவி வழங்க இருப்பவர்கள் ஈஎஸ்ஏயின் கீழ் அந்த நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் தேவைப்படும் காலத்திற்கு சம்பளம் இல்லாத விடுப்புக்கு அருகதை உடையவர்கள் ஆவர். கனடாவிற்கு வெளியே இந்த நடவடிக்கை இருக்குமானால், அந்த நடவடிக்கைக்கு முன்னர் மற்றும் பின்னராக ஆள்அனுப்பப்படும் கனடிய படைகளின் செயல்பாடுகளுக்கு உரிய விடுப்பு இதில் உள்ளடங்கும்.

ரிசர்விஸ்ட் விடுப்புக்கு அருகதை பெற, நீங்கள் குறைந்தது தொடர்ச்சியான ஆறு மாதங்களுக்கு உங்கள் வேலைதருனருக்குப் பணி புரிந்திருக்க வேண்டும். பொதுவாக, ரிசர்விஸ்டுகள் அவர்களது வேலைதருனருக்குத் தங்கள் விடுப்பின் துவக்க மற்றும் முடிவுத் திகதிகளை நியாய பூர்வமான எழுத்துருவிலான அறிவித்தலை வழங்க வேண்டும். ரிசர்விஸ்ட் விடுப்பு, தேவைப்படும் அறிவிப்பைக் கொடுத்து மற்றும் டிசம்பர் 3, 2007 அல்லது அதற்குப் பின்னர் ஆள்அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட, ரிசர்விஸ்டுகளுக்கு மட்டுமே கிடைக்கும்.

ஒரு ரிசர்விஸ்ட் விடுப்பில் உள்ள ஊழியர்கள் அந்தப் பதவி இன்னும் இருந்தால் அதே பதவியில், அல்லது அப்பதவி இல்லாவிடில் ஒரு சமமான பதவியில் மீண்டும் அமர்த்தப்படும் அருகதை கொண்டுள்ளனர். ஒரு வேலைதருனர் அந்த ஊழியர் பணிக்குத் திரும்புவதைத் தள்ளிப்போட்டால், வேலைதருனர் சில நலன் திட்டங்களுக்கான வேலைதருனரினது பங்கு முன்கட்டணங்களை ஊழியரின் வேலை சம்பந்தப்பட்ட நலன்களுக்காகக் கட்டுவதுடன் வேலைதருனர் தள்ளிப் போடும் வேலைக்குத் திரும்பும் தேதி வரை, ஊழியரை அத்தகைய திட்டங்களில் பங்கேற்கவும் அனுமதிக்க வேண்டும்.

## பணிமூப்பும் நலன்களும்

**பணிமூப்பு (சீனியோறிற்றி):** இந்த நான்கு வகைகளில் எந்த விடுப்பில் நீங்கள் இருந்தாலும் சேவைக்கால மற்றும் பணிக்காலத்துக்கேற்ற பணிமூப்பு மற்றும் அங்கீகார கணக்கினைத் தொடர்ந்து பெறுவீர்கள்.

**வேலைதருனர் - வழங்கும் நலத் திட்டங்கள்:** கர்ப்பகால, பெற்றோராயிருத்தலுக்கான, தனிப்பட்ட அவசரநிலை அல்லது குடும்ப மருத்துவ விடுப்பில் நீங்கள் இருக்கும் போது உங்கள் வேலைதருனர் (அ-து ஓய்வூதியம், ஆயுள் மற்றும் நீடித்த ஆரோக்கியக் காப்பீடு, விபத்தினாலான மரணம், மற்றும் பற்காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற) அநேக நலத் திட்டங்களுக்குத் தொடர்ந்தும் அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**சமஷ்டி அரசின் பணிக் காப்பீட்டு நலன்கள்:** கர்ப்பகால, பெற்றோராயிருத்தலுக்கான மற்றும் கருணைப் பராமரிப்பு நலன்களுக்கான பணவரவுகள், சமஷ்டி அரசின் தொழில் காப்பீட்டுத் திட்டத்தில் இருந்து வழங்கப்படுகின்றன. மேலதிக தகவலுக்குக் கனடா மனித வளங்கள் மற்றும் சமூக அபிவிருத்திப் பகுதி - தொழில் காப்பீட்டு விசாரணைகளின் இலவசத் தொலைபேசி இலக்கம் 1-800-206-7218 ஐத் தொடர்பு கொள்ளவும்.

## இந்த விடுப்புகளை எடுத்ததற்காக என்னைப் பணியிலிருந்து நீக்க முடியுமா?

முடியாது. நீங்கள் தகுதியுடையவர் என்றால், நீங்கள் கர்ப்பகால, பெற்றோராயிருத்தலுக்கான, தனிப்பட்ட அவசர நிலை, குடும்ப மருத்துவ மற்றும் ரிசேர்விஸ்ட் விடுப்புகளைப் பெற உங்களுக்கு அருகதை உண்டு.

நீங்கள் இவற்றுள் எந்த விடுப்புகளையும் எடுத்தீர்கள் அல்லது எடுக்கத் திட்டமிடுகிறீர்கள் என்பதற்காக உங்கள் வேலைதருனர் உங்களை மிரட்டவோ, பணிநீக்கம் செய்யவோ, வேலை இடைநிறுத்தம் செய்யவோ, ஊதியத்தைக் குறைக்கவோ அல்லது இவற்றில் எதையேனும் செய்யப் போவதாகப் பயமுறுத்தவோ முடியாது.

இவ்வாறு நிகழ்ந்தால், தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்ளவும்.

## தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்க

**பணிநியமங்கள் தகவல் நிலையத்தை 416 326-7160 அல்லது (கட்டணமற்ற தொலைபேசி இலக்கம்) 1-800-531-5551, அல்லது செவிப்புலனற்றோருக்கான ரிரிவை 1-866-567-8893 இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.** உங்களுக்கு ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு பேசத் தெரியாது எனில் மொழி அறிந்த ஒருவரைக் கண்டறிந்து தொழில் அமைச்சினை அழைக்கும் போது அவரை உங்களோடு வைத்திருங்கள்.

ஈஎஸ்ஏயினால் பாதுகாக்கப்பட்ட உரிமைகள் பற்றிய மேலும் விபரமான தகவலை வழங்கும் மின்தள வெளியீடுகளைப் பெற தொழில் அமைச்சின் இணையத்தளமான www.labour.gov.on.ca இல் தொழில் நியமங்கள் பிரிவுக்கு வருகை தாருங்கள்.

*இந்தத் தகவல் பொதுமக்களுக்கான சேவை என்ற வகையில் வழங்கப்படுகிறது. தகவல்கள் சமகால மற்றும் திருத்தமானதான இருக்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்த நாம் பெருமுயற்சி எடுத்த போதிலும் சில நேரங்களில் தவறுகள் நிகழ்ந்து விடுகின்றன. ஆகையினால் நாம் தகவலின் திருத்தத்தை உறுதிப்படுத்த முடியாது. வாசகர்கள், அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கமுன்னர் இயலுமானவரை அத்தகவலைச் சரிபார்க்கவும்.*

esa
employment standards act

©Queen's Printer for Ontario, 2008
Printed in Canada
ISBN 1-4249-1210-5 (Print)
ISBN 1-4249-1211-3 (HTML)
ISBN 1-4249-1212-1 (PDF)

Tamil
"Leaves of Absence" is also available in English, French and other languages.
« Congés autorisés » est également disponible en anglais, en français et en d'autres langues.